Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/45/2023**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!**
**அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்**
**ஆண்டவராம் ஈசோமெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

தக்கலை மறைமாவட்டத்தின் முதல் மாமன்றம் 2023 செப்டம்பர் 28 முதல் 30 வரை, மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மையமான தக்கலை சங்கமத்தில் வைத்து நடத்தப்படுகிறது. மறைமாவட்ட முதல் மாமன்றத்திற்கான 'அழைப்புஆணையை' கன்னிமரியாவின் அமலோற்பவ தினமான, டிசம்பர் 8, 2022 அன்று அதிகாரபூர்வமாக நான் வெளியிட்டேன். இத்தகையதொரு மாமன்றமானது தக்கலை மறைமாவட்டத்தில் இதுவே முதல்முறை. இது பயன்மிக்கதாக மாறும் பொருட்டு, இதன் முன்தயாரிப்புகள் பல கட்டங்களில் கடந்த ஓராண்டு காலமாக நடந்தன. இம்மாமன்றமானது, தலத்திருச்சபையாகிய, தக்கலை மறைமாவட்டத்தின் ஒன்றிப்பையும் கூட்டொருங்கியக்கத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைய இருக்கிறது. தூய ஆவியார் உணர்த்தும் காரியங்கள் செவிகளில் விழும் பொருட்டு, சபை மாந்தர் அனைவரும் இம்மாமன்றம் வழியாக தங்கள் இதயங்களையும் மனங்களையும் இறைவேண்டல் வழியாக கடவுளிடம் திருப்புகின்றனர். இத்தருணத்தில் மறைமாவட்ட மாமன்றம் பற்றிய சில முக்கியமானத் தகவல்களை உங்களோடுப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

**மறைமாவட்ட மாமன்றம்: குறிப்பு**

'மறைமாவட்ட ஆயரின் கீழ் இறைமக்கள் அனைவரையும் கூட்டி நடத்தப்படும் ஆலோசனை மன்றம்தான் மறைமாவட்ட மாமன்றம். இம்மாமன்றம் மறைமாவட்ட ஆயருக்கு ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது. மறைமாவட்டம் சம்மந்தமான மிக

முக்கியமான வி'யங்கள் இதில் விவாதிக்கப்படுகின்றன. அது சபை ஒழுங்கு சார்ந்ததாகவோ, திருத்தூதுப் பணிமுறைமைகள் பற்றியதாகவோ இருக்கலாம். இம்மாமன்றம் சமகாலச் சூழலைக் கருத்தில் கொண்டு, சபையின் நலனுக்காக நடத்தப்படுகிறது.'இம் மாமன்றத்தில், அருள்பணியாளர்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகியோரின் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்பர்.

இம்மாமன்றத்தில், திருச்சபை வழியாக கடவுள் ஆற்றிவரும் அரும் பெரும் காரியங்களை நினைத்து நன்றி கூறப்படுகிறது. இதில் பங்கேற்போர் செபம் மற்றும் ஆழமான கருத்துப்பகிர்வுகள் வழியாக சபைக்கு ஆக்கப்பூர்வமானப் பங்களிப்பை அளிக்கிறார்கள். நாம் பெற்றிருக்கும் திருத்தூது மரபு மற்றும் அதன்வழியாக கைகூடியிருக்கும் நம்பிக்கை ஆகியவற்றிற்கானப் பதிலுரையாகவும் மாமன்றம் பார்க்கப்படுகிறது. கூடிவருதல் வழியாக சபை மாந்தரின் இம்மாமன்றம் மனங்கள் ஒன்றிணைக்கப்படுகின்றன. மெசியாவின் மறையுடலாகிய திருச்சபை மாமன்றம் வழியாக கட்டியெழுப்பப்படுகிறது.

### முதல் மறைமாவட்ட மாமன்றத்தின் பின்புலம்

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கூடிய சீரோ மலபார் ஆயர் பேரவையானது சீரோ மலபார் மாமன்றத்தை 2024 ஆம் ஆண்டு, ‘‘காலச்சூழலுக்கு ஏற்ப சீரோ-மலபார் திருச்சபையின் பணியும் வாழ்வும்’’ என்னும் மையக்கருத்தில் நடத்தலாம் எனத் தீர்மானித்தது.மூன்று கட்டங்களிலாக இதை நடத்த பரிந்துரைக்கப்பட்டது. அவையாவன:

1. மாமன்றத்திற்கான தலைப்புகளைக் கேட்டறிதல். அதற்காக, ‘‘காலச்சூழலுக்கு ஏற்ப சீரோ-மலபார் திருச்சபையின் பணியும் வாழ்வும்’’ என்னும் மையச்சிந்தனை அளிக்கப்பட்டது.

2. முன்வரைவு ஆவணத்தின் (Lineamenta) அடிப்படையில் எல்லா மறைமாவட்டங்களிலும் மறைமாவட்ட மாமன்றங்களை நடத்துதல்.

3. செயல்பாட்டு ஆவணத்தின் அடிப்படையில் சீரோ மலபார் உயர் பேராய மாமன்றம் நடத்துதல். இதில் இரண்டாம் கட்டத்தின் பகுதியாக நமது மறைமாவட்டத்தில் மாமன்றம் நடத்துவதற்கான தீர்மானத்தை நான் எடுத்தேன்.

### மறைமாவட்ட மாமன்றத்திற்கான முன் தயாரிப்புகள்

கடந்த ஓராண்டாக, அருள்பணிப்பேரவை, அருட்பணியாளர்கள் குருக்கள் பேரவை, குருக்கள் கூட்டம் போன்றவற்றில் மறைமாவட்ட மாமன்றம் குறித்த விரிவான விவாதங்கள்

முன்னெடுக்கப்பட்டன. இம்மாமன்றம் நடத்துவதற்கென 2023 ஜுன் 20 ஆம் தேதி 10 பேர் கொண்ட வழிகாட்டுதல் குழுவை நான் ஏற்படுத்தினேன். வழிகாட்டுதல் குழு, மாமன்றத்திற்கான தயாரிப்பு ஆவணம் உருவாக்கி விவாதத்திற்கென கொடுத்தது. குருக்கள், துறவியர், குருமாணவர்கள், பொதுநிலையினர் என பல குழுக்கள் நடத்திய விவாதங்களிலிருந்துப் பெறப்பட்ட கருத்துக்கள், மாமன்திற்கான செயல்பாட்டு ஆவணம் தயாரிக்க பேருதவியாக இருந்தது.

இவ்விவாதங்களும் கருத்துக்களும், ‘சபையானது கூட்டொருங்கியக்கத்தன்மை’ பெற்றது என்னும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்தை மெய்ப்படுத்துவதாக அமைந்தது. பிறரின் குரலுக்குச் செவிமடுத்து, அவர்கள் வழியாக தூய ஆவியார் பேசுவதை தேர்ந்து தெளிதல்; கூட்டொருங்கியத்தின் பகுதியாகத் திருத்தந்தை காண்கிறார். மறைமாவட்டத்தின் அனைத்து மக்களின் கருத்துக்களும் கேட்கப்பட வேண்டும் என்னும் விருப்பத்தின் வெளிப்பாடாக விவாதங்கள் இருந்தன என்பதே உண்மை.

## மறைமாவட்ட மாமன்றத்திற்கான மையக்கருத்து மற்றும் துணைக் கருத்துக்கள்

நமது மறைமாவட்ட மாமன்றத்திற்காக, ‘காலச்சூழலுக்கு ஏற்ப தக்கலை மறைமாவட்டத்தில் சீரோ மலபார் திருச்சபையின் பணியும் வாழ்வும்’ என்னும் தலைப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. நமது பணியும் வாழ்வும் கிறிஸ்துவை நோக்கியதாகவும், மூவொரு இறைவனின் சமூக உறவில் வாழ்வதை மையப்படுத்தியகாவும் அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு உகந்த விதத்தில் இன்றைய சூழலுக்கேற்ப, நம்மையும் நம்முடைய அமைப்புகளையும் மறுமலர்ச்சிக்கு உட்படுத்த வேண்டயதைப் பற்றி தீவிரமாக விவாதிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இம்மையக் கருத்தை ஒட்டியதாக, நம்பிக்கை வாழ்வு, நம்பிக்கைப் பயிற்சி – மறைக்கல்வி, பிறரன்புப் பணிகள், ஊடகப் பயன்பாடு, சமூக-பொருளாதார-அரசியல் உறவில் மறைமாவட்டம் கையாள வேண்டிய உத்திகள் போன்றத் துணைக்கருத்துகள்; இம்மாமன்றத்தில் விவாதிக்கப்படும்.

## மறைமாவட்ட மாமன்றத்தில் பங்கேற்கும் பிரதிநிதிகள்

வெவ்வேறு பணிநிலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுநிலையினர் துறவியர் மற்றும் குருக்கள் ஆகியோரை பங்கேற்பாளர்களாகக் கொண்ட 70 பேர் இம்மாமன்றத்தில் பங்கேற்கிறார்கள். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக் கடந்து, ஒவ்வொருவரும் தாங்கள் பெற்றிருக்கும் அழைப்பை எப்படி திருச்சபையின் வளர்ச்சிக்காக பயன்படுத்த முடியும் என ஆலோசிக்கவும், அதற்காக செபிக்கவும் தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்தளிக்கவும் இம்மாமன்றம் உகந்தத் தளமாக இருக்கிறது. இதிலிருந்து பெறப்படுபவை மறைமாவட்ட

மேய்ப்புப்பணிக்கான திட்டத்தை வடிவமைக்க உதவும். ஆகையால், மாமன்றத்தில் பங்கேற்கும் பிரதிநிதிகள் அனைவரும், தொடக்கம் முதல் இறுதிவரை முழு மனதுடன் இதில் பங்கேற்க வேண்டும். மாமன்றத்தில் விவாதிப்பதற்கென செயல்பாட்டு ஆவணத்தை வாசித்து, தயாரிப்புடன் மாமன்றத்தில் பங்கேற்க வரவேண்டுமென அன்புடன் நினைவூட்டுகிறேன்.

நிறைவாக

நம்பிக்கை வாழ்வு புத்துயிர் பெறவும், தெளிவான நோக்கங்களுடன், மறைமாவட்டத்தின் அனைத்து மட்டங்களிலும் மேய்ப்புப்பணிகளைத் தீவிரமாக முன்னெடுக்கவும், அனைவரும் கூட்டாக இணைந்து இயங்கவும், அதன் வழி நற்செய்திக்கு சான்று பகரவும் இம்மாமன்றம் புதிய சாளரங்களைத் திறக்கட்டும். அதற்காக நான் இறைவனை வேண்டுகிறேன். தூய ஆவியார் நம் வழியாக பேசுவதற்காக அனைவரும் இதயங்களை கடவுளை நோக்கித் திருப்ப வேண்டும். திருச்சபை நம்மிடம் ஒப்படைத்திருக்கும் பணியை முழு மனதுடன் முன்னெடுக்க, தூய ஆவியாரின் தூண்டுதலும், ஆற்றலும் அவசியம். குறிப்பாக, பங்கேற்கும் பிரதிநிதிகள் நடுவில் தூய ஆவியார் செயலூக்கமுடன் செயலாற்ற வேண்டும். இம்மாதம் முழுவதும், திருப்பலி, ஆராதனை, செபமாலை, பிற செபங்கள் அனைத்திலும் மறைமாவட்ட மாமன்றத்திற்காக செபிக்க கேட்டுக் கொள்கிறேன். மாமன்றம் பயன்மிக்கதாக அமைவதற்காக, தயாரிக்கப்பட்ட இறைவேண்டுதலை இன்று தொடங்கி எல்லா நாட்களிலும் திருப்பலிக்குப் பின்னர் சொல்ல வேண்டும். நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியான திருச்சபையின் தாய் தூயமரியா, புனித தோமா ஆகியோரின் பரிந்துரை வழியாக, ஆண்டவராகிய கடவுள் ஏராளமான ஆசிகளை மாமன்ற நாட்களில் பொழிய ஆசித்து; இறைவனை வேண்டுகிறேன்.

அனைவரும் இறைவனை வேண்டுங்கள். உங்கள் மேல் ஈசோ மெசியாவின் அருள் தங்கி இருப்பதாக.

ஆயர் இல்லம்
01.009.2023

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

என்றும் ஈசோ மெசியாவில்

✠மார் ஜார்ஜ் இராஜேந்திரன் **SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**குறிப்பு:** இச்சுற்றுமடலை 03.09.2023, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்.